Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 447/2019**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தெய்வசர்மா | ஜாதி | : | |
| த/பெ | : | ராதாகிருஷ்ணன் | தொழில் | : | உதவி வன பாதுகாவலர் |
| கிராமம் | : | ஈரோடு | சமயம் | : | |
| தாலுகா | : | ஈரோடு | வயது | : | 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026.

(1, 2, 4 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி இறந்துவிட்டார்)

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி வன பாதுகாவலராக ஈரோடு வன பாதுகாப்பு படையில் வேலை பார்த்து வருகிறேன். நான் கடந்த 01.09.2016 முதல் 30.11.2018 ஆம் தேதி வரை கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்த போது, அந்த பணி காலத்தில் கடந்த 22.11.2016 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் எனக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் குழு அமைத்து உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடமானது பண்ணைப்பட்டி அருகில் வைகை பார்ம், சாத்தாரப்பன் கோவில் அருகில் நான்கு எதிரிகள் மறைந்து இருந்தார்கள். அவர்களை பிடித்து விசாரணை செய்ததில் அவர்களிடம் மயில் கறியும் மற்றும் காயம்பட்ட ஒரு மயிலும், அதனுடன் அருவாள், கத்தி, ஈய டப்பா, கரு மருந்து, செல்போன்கள் 4, நெற்றி லைட் 3, 3 இருசக்கர வாகனங்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் மகசரில் போடப்பட்ட தீப்பெட்டி 2, நாட்டுத்துப்பாக்கி 1 லோடுடன் கைப்பற்றப்பட்டது. மேற்படி எதிரிகள் கன்னிவாடி பிளாக்1, RF ல் நுழைந்து தேசிய மயிலை வேட்டையாடியது

குற்றம் என்பதால் மேற்படி எதிரிகளை கைது செய்து இரவு நேரம் என்பதால் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து ஒவ்வொரு நபரிடமும் தனித்தனியாக குற்ற ஒப்புதழ் வாக்குமூலம் பெறப்பட்டது. 1வது எதிரி யோவான் என்பவர் 23.11.2016 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் வனச்சரக அலுவலகத்தில் வைத்து எனது முன்னிலையில் கொடுத்தார். அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வனவர், கன்னிவாடி பிரிவு ராஜு என்பவர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து **(அ.சா.ஆ.9/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் சோவியத்துராஜா என்பவர் எனது முன்னிலையில் அதே அலுவலகத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர், கன்னிவாடி வனச்சரகம் செல்வராஜ் என்பவர் அன்றையதினம் 07.30 மணிக்கு பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து **(அ.சா.ஆ.10/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் அன்றையதினம் எதிரி மைக்கேல் என்பவர் எங்களது அலுவலகத்தில் வைத்து எனது முன்னால் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் வேல்முருகன் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து **(அ.சா.ஆ.11/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் அன்றையதினம் சுமார் 08.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரி குணசேகரன் என்பவர் எங்களது அலுவலகத்தில் வைத்து எனது முன்னிலையில் வனக்காப்பாளர், சித்தையன்கோட்டை பீட் சங்கர் என்பவர் பதிவு செய்தார். அதில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து **(அ.சா.ஆ.12/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றையதினமே இவ்வழக்கின் சொத்துக்களுக்கு படிவம் 95 தயார் செய்து இவ்வழக்கின் சொத்துக்களையும், எதிரிகளையும் கனம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினேன். என்னால் தயார் செய்யப்பட்ட படிவம் 95 **(அ.சா.ஆ.13/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையதினம் சம்பவ இடத்தில் வைத்து வனக்காப்பாளர் செல்வராஜ் என்பவரால் தயார் செய்யப்பட்ட H நமுனா ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக என் மூலம் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எங்கள் அலுவலகத்தில் வைத்து என்னால் தயார் செய்யப்பட்ட ஸ்தல மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மயில் கறியின் புகைப்படம் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மயில் கறியினை பகுப்பாய்வு செய்வதற்காக கனம் நீதிமன்றத்தால் என்னால் மனு செய்யப்பட்டு கனம் நீதிமன்றத்தால் அனுதிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு வரப்பெற்ற CSIR centre for Cellular and molecular biology, Uppal road, Hyderabad, Telengana நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி வழங்கிய பகுப்பாய்வு சான்றிதழ் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் இறந்துபோன மயிலினை பிரேத பரிசோதனை செய்வதற்காக கன்னிவாடி கால்நடை உதவி மருத்துவர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் மேற்படி மயிலினை பிரேத பரிசோதனை செய்து அவர் வழங்கிய மயிலின் பிரேத பரிசோதனை அறிக்கை **(அ.சா.ஆ.14/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்துக்களான நாட்டுத்துப்பாக்கி அ.சா.பொ.1 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட 4 செல்போன்கள் அ.சா.பொ.2 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட TN 39 W 4781 என்ற TVS XL Super இருசக்கர வாகனத்தை அ.சா.பொ.3 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட நெற்றி லைட் (எண்ணிக்கை –3) அ.சா.பொ.4 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட ஈயடப்பாவில் அடைக்கப்பட்ட 50 கிராம் கருமருந்து அ.சா.பொ.5 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட ஈயடப்பாவில் அடைக்கப்பட்ட சிறிய ஈய துகள்கள் அ.சா.பொ.6 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட தீப்பெட்டி (எண்ணிக்கை–2) அ.சா.பொ.7 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் அறுவாள் ஒன்று அ.சா.பொ.8 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கத்தி ஒன்று அ.சா.பொ.9 ஆக ஏற்கனவே

என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட TN 59 AE 2359 என்ற Bajaj platina இருசக்கர வாகனம் அ.சா.பொ.10 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் TN 57 AF 1277 TVS Max இருசக்கர வாகனம் அ.சா.பொ.12 ஆக ஏற்கனவே என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரிகள் மீது 1882 தமிழ்நாடு வனச்சட்டம் 21(d)(h) மற்றும் 1972 வன உயிரின பாதுகாப்பு சட்டப்பிரிவு 9, 51(1), 39(1) ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என்று கனம் நீதிமன்றத்தில் Form A தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை பதிவு செய்த வன அதிகாரியும் நீங்கள் தான், புலன் விசாரணை அதிகாரியும் நீங்கள் தான் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக எத்தனை மணிக்கு தகவல் கிடைக்கப்பட்டது என்றால் சுமார் இரவு 10.30 மணிக்கு கிடைக்கப்பட்டது. அப்போது நான் வனச்சரக அலுவலகத்தில் இருந்தேன். மற்ற வன பணியார்ளர்க எங்கு இருந்தார்கள் என்றால் அவர்கள் தனித்தனியாக ரோந்து பணியில் இருந்தார்கள். யார், யார் எங்கு இருந்தார்கள் என்று உங்களது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வன பணியாளர்கள் யார், யார் எந்த எந்த பீட்களில் பணியில் இருந்தார்கள் என்றால் ராஜு வனவர் கன்னிவாடி பீட்டில் இருந்தார். சரவணன் வனவர் செம்பட்டி பீட்டில் பணியில் இருந்தார். செல்வராஜ் வனக்காப்பாளர் கன்னிவாடி பீட்டில் பணியில் இருந்தார். வேல்முருகன் வனக்காப்பாளர் பெரியூர் பீட்டில் பணியில் இருந்தார். சங்கர் வனக்காப்பாளர் சித்தையன்கோட்டை பீட்டில் பணியில் இருந்தார்.

நீங்கள் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று விட்டேன். சம்பவ இடத்திற்கு வன பணியாளர்கள் எவ்வாறு வந்தார்கள் என்றால் 3 பேர் ஜீப்பில் வந்தார்கள், மற்ற நபர்கள் தனித்தினயே வந்தார்கள். உங்களுடன் ஜீப்பில் யார், யார் வந்தார்கள் என்றால் ராஜு, செல்வராஜ், சங்கர் ஆகியோர் என்னுன் ஜீப்பில்

வந்தார்கள். மற்ற வன பணியாளர்கள் எவ்வாறு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மற்ற பீட்டில் உள்ள வன பணியாளர்களுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் வனவர்களுக்கு வனச்சரக அலுவலர் தெரிவித்தார். வனவர்கள் வனக்காப்பாளர்களுக்கு தெரிவித்தார்கள். மேற்சொன்ன விபரத்தை விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடம் சென்றவுடன் நீங்கள் எதிரிகளை கைது செய்தீர்களா அல்லது அனைத்து வன பணியார்களும் வந்த பின்னர் எதிரிகளை கைது செய்தீர்களா என்றால் சம்பவ இடம் சென்று வனத்தை ரோந்து செய்துகொண்டிருந்தோம். உங்களுடைய வாகனம் வனத்தில் எந்த இடம் வரை சென்றது என்றால் சாத்தாரப்பன் கோவில் வரை தான் அனைத்து வாகனங்களும் செல்ல முடியும். எதிரிகள் பயன்டுத்திய வாகனம் எங்கு இருந்தது என்றால் காப்புக்காட்டுக்கு ஓரமாக ஒரு புதருக்கு பக்கமாக நிறுத்தப்பட்டிருந்தது.

வாகனம் நிறுத்தப்பட்ட இடத்திற்கும், எதிரிகளை கைது செய்த இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு என்றால் சுமார் 1km தூரம் இருக்கும். எதிரிகளின் வாக்குமூலங்கள் உங்கள் முன்னிலையில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வனக்குற்றம் A நமுனா வரிசை எண்.9 ல் எதிரிகளை புதருக்குள் மறைந்திருந்தபோது சுற்றி வளைத்து பிடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வனக்குற்றம் A நமுனா வரிசை எண்.9 ல் மயில்களின் வெட்டப்பட்ட கறி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மயில்களின் தலை பகுதி கண்டுபிடிக்கப்பட்டதாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்ததாக சொல்லப்படும் மயிலின் தோல் இந்த வழக்கில் கைப்பற்றி சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

காட்டு கோழி போன்றவற்றை தோலை நீக்கிவிட்டாலும் மயிலின் தோலை நீக்கிவிட்டாலும் இரண்டும் ஒரே மாதிரி தான் இருக்கும் என்றால் சரிதான். பகுப்பாய்வுக்கு முன்பே மயில் கறி என்று நீங்கள் முடிவு செய்துவிட்டீர்கள் என்றால் சரிதான். பிடிபொருட்கள் எந்த எதிரியிடமிருந்து குறிப்பாக கைப்பற்றப்பட்டது என்றால் 4 நபர்களிடமிருந்து இருந்து தான் கலந்து கைப்பற்றினோம். யார்,

யாரிடமிருந்து எந்த எந்த பொருட்களை கைப்பற்றினீர்கள் என்றால் நியாபகமில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எந்த எந்த எதிரிகளிடமிருந்து எந்த பொருள் கைப்பற்றப்பட்டது என்று H நமுனாவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளோம். யாருடைய வாக்குமூலத்தில் மேற்சொன்ன பொருட்கள் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று கூறியுள்ளீர்கள் என்றால் குறிப்பிட்டு வாக்குமூலத்தில் இல்லை. வாகனம் மட்டும் எந்த எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

எந்த வாகனத்தில் பிடி பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் அரசு வாகனத்தில் கொண்டு வந்தோம். இருசக்கர வாகனத்தை வனச்சரக பணியாளர்கள் ஓட்டி வந்தார்கள். மேற்சொன்ன விபரங்களை உங்களது அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகளில் யாரையும் மயிலை பார்த்து சுட்டதாக நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை மற்றும் மயிலை சுட்டதாக வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். எவ்வாறு மயிலை வேட்டையாடினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி எந்த எதிரி சுட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லாதபோது, நீங்கள் கைப்பற்றிய மயிலுக்கு எவ்வாறு அடிபட்டது என்று நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அடிபட்ட மயிலுக்கு மருத்துவ சிகிச்சை கொடுத்ததற்கான சான்றுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மயிலுக்கு மருத்துவம் கொடுத்ததாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரிகளின் செயலால் நீங்கள் காயம்பட்டு இறந்ததாக சொல்லும் மயிலுக்கு காயமோ, இறப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் தான் இந்த வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். மயிலை வெட்டிக்கொண்டிருந்தபோது சுற்றி வளைத்து எதிரிகளை பிடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் மட்டும் தான் பதிவு செய்துள்ளோம். தற்போது நீதிமன்ற முதல் விசாரணையிலும் மயிலை வெட்டிக்கொண்டிருக்கும் போது சுற்றி வளைத்து பிடித்தோம் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல்

வாக்குமூலத்தை எதிரிகள் கொடுக்கவில்லை என்றும், நீங்களாகவோ எதிரிகளின் பெயரில் தயார் செய்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகள் அளித்தபோது தனிநபர் சாட்சியங்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் வந்ததாக சொல்லும் வாகனம் யாருக்கு சொந்தமானது என்று அன்றைய தினத்தில் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் கருமருந்து, ஈய டப்பா யார் எங்கிருந்து வாங்கினார்கள் என்று விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து மேற்படி பொருட்களை கைப்பற்றியிருந்தால் உரிய முறையில் விசாரணையில் சொல்லியிருப்பீர்கள் என்றும், அவ்வாறு கைப்பற்றாததால் தான் நீங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்ய காவல்நிலையத்திற்கு எதுவும் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வனச்சட்டம் மட்டுமே பொருந்தும். அறுவாள், கத்தி ஆகியவற்றை யாரிடமிருந்து எந்த இடத்தில் கைப்பற்றினீர்கள் என்றால் குறிப்பிட்டு தற்போது சொல்ல இயலவில்லை, நியாபகமில்லை. அறுவாள், கத்தியின் நீள அகலம் மற்றும் கத்தியின் பிடியில் உள்ள நிறம் ஆகியவை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஸ்தல மகசர் பொதுவாக சம்பவம் நடந்த இடத்தில் தான் தயார் செய்யப்படவேண்டும் என்றும், இந்த வழக்கில் வனச்சரக அலுவலகத்தில் வைத்து ஸ்தல மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எந்த சர்வே நம்பரில் உள்ள காப்புக்காட்டு பகுதியில் வழக்கு சம்பவம் நடந்தது என்று நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் பிளாக் 1, RF என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நீங்கள் எதிரிகளிடமிருந்து தனித்தனியாக வாக்குமூலம் வாங்கவில்லை என்றும், நீங்களே வாக்குமூலங்கள் தயாரித்து எதிரிகளை வற்புறுத்தி பெறப்பட்டது என்றால் சரியல்ல. ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியே அரை மணி நேரம் எடுத்துக்கொண்டேன்.

குணசேகரன் என்பவருக்கும் 08.30 மணிக்கு தான் வாக்குமூலம் பெறப்பட்டது என்றும் மற்றும் குழந்தைசாமி மகன் மணி என்பவருக்கும்

08.30 மணிக்கு தான் வாக்குமூலம் பெறப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor